# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2214/4 - 2021 පෙබරවාරි මස 08 වැනි සඳුදා - 2021.02.08

*2214/4 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 21/ 1978* (X) (*அ*)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றாக அங்கீகரிக்கப்படுகின்ற* PV *17745 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2208/ 1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஆம் அட்டவணையை, நிரல்* I *இல் காணப்படும் "கற்கைநெறி மூலம் வியாபார நிர்வாக முதுமாணி" என்னும் பதிவையும் அதன்* II *ஆம் நிரலிலுள்ள அதன் நேரொத்த பதிவில் காணப்படும் அதனது சுருக்கீட்டுப் பெயரையும் அதனது உடனடுத்துப் பின்னர், இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய இதற்கான அட்டவணை* II *இல் முறையே நிரல்* I *இன் கீழும் மற்றும் நிரல்* II *இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*


1A - PG 5306 — 525 (2021/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

*நிபந்தனைகள்*

1. வியாபார நிருவாக முதுமாணி (எஸ்எல்கியூஎப் மட்டம் 10) என்ற தலைப்பிடப்பட்ட கற்கைநெறி தொடர்பில் மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்கான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை பின்வருவனவாக இருத்தல் வேண்டும்.

(i) முகாமைத்துவ அல்லது வியாபார மற்றும் பொருளியல் பாட இடப்பரப்பில் 30 திறமைச் சித்திகள் உட்பட ஓர் இளமாணிப் பட்டம் ஒன்று ; அல்லது

(ii) இயைபான கற்கை இடப்பரப்பொன்றில் எஸ்எல்கியூஎப் மட்டம் 6 தகைமை ஒன்று அல்லது மேற்பட்ட தகைமை ;

(iii) எஸ்எல்கியூஎப் மட்டம் 6 இற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு உயர் தொழில் தகைமை ; அல்லது

(iv) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறான 0-4 அளவுத்திட்டம் ஒன்றின் மீது ஆகக்குறைந்தது 3.0 GPA கொண்ட என்வீகியூ மட்டம் 7 இனைப் பூர்த்தி செய்தல்.

2. எந்திர மின்னணுவியல் பொறியியலில் கௌரவ விஞ்ஞான பொறியியல் இளமாணி (SLQF 6) எனத் தலைப்பிடப்பட்ட கற்கைநெறி தொடர்பில் மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்கான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் இணைந்த கணிதத்தில் மூன்று (03) சாதாரண சித்திகள் ('S') அல்லது அதற்குச் சமமானதைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. இக்கட்டளை வெளியீட்டுத் திகதியிலிருந்து ஒவ்வொரு ஐந்து (5) வருடங்களுக்கும் பாட மீள் மீளாய்வு II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்டம் வழங்குவதற்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டங்களுக்கான சுருக்கீட்டுப் பெயர் |
|---|---|
| வியாபார நிருவாக முதுமாணி | எம்பிஏ |
| எந்திர மின்னணுவியல் பொறியியலில் கௌரவ விஞ்ஞான பொறியியல் இளமாணி | பிஎஸ்சி கௌரவ (பொறியியல்) (எந்திர மின்னணுவியல் பொறியியல்) |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2021, சனவரி 28.

02-468

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.